[24th March 1961

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member knows a little about the technicalities involved in this matter. All researches can only give indications of the possible existence of oil and there are such possibilities.

SRI N. R. THIAGARAJAN : காவேரிப் பகுதியிலே எண்ணெய் பற்றி இதுவரை ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதாக கனம் அமைச்சர் சொன்னுர். இதிலே நம்முடைய சர்க்காருக்குக் கிடைத்த தகவல்களைக் கூற முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு முன்பு இந்தச் சபையிலே இதைப்பற்றி 2, 3 முறை விவரங்கள் கொடுத்திருக்கிறேன். முதலிலே ஏரோநாடிக் செய்தார்கள். இரண்டாவது சீஸ்மிக் செய்திருக்கிருர்கள். இந்த இரண்டு சர்வேக்களின் பயனுக, எண்ணெய் இருக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாது.

SRI R. SWAMINATHA MERKONDAR : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவேரிப் பகுதியில் ஏதாவது ஆராய்ச்சி நடந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : காவேரி பேசின் என்று சொல்வது திருச்சி, தஞ்சை எல்லாம் சேர்ந்த பகுதிகள்தான்.

SRI A. VEDARATHNAM : ரூமேனியா அரசாங்கத்தார் இந்த ஆராய்ச்சியை நமக்கு இலவசமாகச் செய்வதாகச் சொல்லியிருக்கிருர்கள். அவர்கள் இந்த ஆராய்ச்சித் துறையிலே நல்ல அனுபவம் உள்ளவர்களாயிற்றே ? அப்படி இருந்தால், ஒருபுறத்திலே இந்த ஆராய்ச்சியை நடத்துவதினுல் என்ன நஷ்டம் ? இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். ரூமேனியா அரசாங்கத்தார் இதிலே உதவி செய்வதற்கு என்னென்ன கண்டிஷன் கொடுத்திருக்கிருர்கள் என்பது தெரியாது. அதுபற்றிய விவரமே இந்த சர்க்காருக்கு கிடைக்கவில்லை.

SRI A. GOVINDASAMY : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் அநேகமாக எண்ணெய் இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். முடிவாகத் தெரிந்துகொள்வதற்கு மேலும் ஏதாவது ஆராய்ச்சி செய்வதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொடர்ந்து மேற்கொண்டு வேலை நடத்தப்படும். அதற்காக டிரிலிங் போடுவதாக இப்போது திட்டம் இருந்துகொண்டிருக்கிறது.

A person being the President of more than one Co-operative Society (Prohibition)

*1068 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரே நபர் தலைவராக இருக்கக்கூடாதென்று எப்போது சர்க்கார் உத்தரவு போட்டார்கள் ?

(இ) அவர்கள்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir. The Government have not issued any such order. But the Co-operative rules have been amended to prohibit a person from being a

24th March 1961]

member of more than one housing society of any type without the general or special sanction of the Registrar of Co-operative Societies. This rule also provides that any person who was a member of more than one housing society on the date of the commencement of the rules would cease to be a member of all housing societies unless he resigned his membership of all but one of the societies within a month from that date.

(இ) Does not arise.

New T.B. Sanatoriums (Third Plan)

* 1069 *Q*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் எத்தனை டி. பி. சானடோரியம் ஆரம்பிக்க உத்தேசம் ?

(இ) எங்கெங்கே ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Nil.

(இ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலே புதிதாக மேலும் டி. பி. சானிடோரியங்கள் ஆரம்பிக்கப் போவதில்லை என்று சொல்லும்போது, இப்போது ஆரம்பித்திருக்கிற அல்லது ஆரம்பத்திலே இருந்து கொண்டிருக்கிற சானிடோரியங்களில் மேலும் பல வார்டுகளை ஏற்படுத்தி, படுக்கைகளை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இருக்கிற சானிடோரியங்களில் படுக்கைகளை விஸ்தரிப்பதற்கு திட்டம் இருக்கிறது. தாம்பரத்திலே, இன்னும் மற்ற இடங்களிலே உள்ள சானிடோரியங்களில் படுக்கைகளை விஸ்தரிக்கப்படும். அதோடு வேலூருக்கு அடுத்தாற்போல் ஒரு புதிய சானிடோரியம் கட்டுவதற்கு இருக்கிறது. இதிலே முதலில் 40, 50 என்று ஆரம்பித்து கடைசியில் 100 படுக்கைகள் ஆக்கப்படும்.

Municipal Drainage Schemes (aid)

* 1070 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any municipalities have applied for aid for undertaking drainage schemes; and

(*b*) if so, the amount asked for?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes. Kumbakonam and Madurai Municipalities.

(*b*)

		Loan.	Grant.
		RS.	RS.
Kumbakonam Municipality	..	84,500	84,740
Madurai Municipality	..	3,43,500	

SRI N. K. PALANISAMI : Sir, may I know how much amount has been given to these municipalities so far?